**வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் - 2021**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகளையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள்

அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது ஏனைய நியமங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதாவது இருக்குமாயின் நிறுவனம் ஒன்று சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதி வருமானம் மற்றும் செலவின மீதிகளில் ஈடு செய்ய முடியாதிருந்த போதிலும், சீனோர் மன்றத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரு வியாபார கடன்பட்டோரான ரூபா 53,308,846 மீதியில் கூட்டுமொத்தமான ரூபா 7,955,712 ஆன மறை மீதி ஈடுசெய்யப்பட்டமையினால் வியாபாரக் கடன்பட்டோர் ரூபா 7,955,712 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வியாபார கடன்பட்டோரில் முற்பணமாக கிடைக்கப் பெற்ற ரூபா 7,955,712 ஆன மீதி கடன்பட்டோர் பட்டியல் விநியோகிக்கப்பட்ட பின்னர் கடன்பட்டோரில் ஈடுசெய்யப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் அதனை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதி வருமானம் மற்றும் செலவின மீதிகளில் ஈடுசெய்யாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் மாற்றமுறாத மற்றும் இழப்பீடான இருப்புக்கள் முறையே ரூபா 5,950,509 மற்றும் ரூபா 70,715 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 6,021,224 தொடர்பாக இழப்பீட்டிற்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | அசைவுறாத மற்றும் இழக்கப்பட்ட இருப்பு தொடர்பாக இழப்பீட்டிற்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நோர்த் சீ தனியார் கம்பனியில் இருந்து கிடைக்க வேண்டியதாக ரூபா 9,204,498 மீதி நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த மீதி 2011 ஆம் ஆண்டில் இருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். இலங்கை கணக்கீட்டு நியமம் 9 இன் 5.5 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்ட காலமாக காணப்பட்ட இந்த மீதிக்காக இழப்பீட்டு நட்டம் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நீண்ட காலம் காணப்படுகின்ற இந்த மீதிக்காக இழப்பீட்டு நட்டம் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஈ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ''பெறுமானத் தேய்வு'' என்ற சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு செய்யக் கூடிய பெறுமதி அதன் பயன்தரு ஆயுட் காலம் முழுவதும் ஒரே சீராக ஒதுக்க வேண்டியிருந்ததுடன், 51 ஆவது பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட் காலம் குறையுமாயின் ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாற தேறிய புத்தகப் பெறுமதி பூச்சியம் கிரயமான ரூபா 88,422,776 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக இழிவுப் பெறுமதியோ அல்லது பயன்தரு ஆயுட் காலமோ மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக இழிவுப் பெறுமதியோ அல்லது பயன்தரு ஆயுட் காலமோ ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்குரிய காரைநகர் படகு ரூபா 146,952,561 பெறுமதியான கட்டிடமொன்று மீன் பிடித் துறை அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், காணியின் பெறுமதி சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காரை நகர் படகுத்துறையில் 02 ஆம் கட்டத்தின் கீழ் மீன்பிடித் துறை அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்கு கையளிக்கப்பட்ட படகினை ஓட்டுவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த பாதை (வழுக்கிச் செல்லும் பாதை) கழிவிச் செல்வதை தடுப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள அணை மற்றும் அதன் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள வலை வேலி, படகினை நிறுத்தி வைப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள நிலையம் போன்ற நிர்மாண விடயங்களுக்குரிய பெறுமதி சரியான இனங்கண்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.<br><br>இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்கூறப்பட்ட சொத்துக்கள் சார்ந்த எதிர்கால நலன்கள் நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமையால் இந்த சொத்துக்கள் மற்றும் காணியின் பெறுமதி சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | காணியின் பெறுமதி சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு 3 வருடங்களுக்கு அல்லது 5 வருடங்களுக்கு ஒரு தடவை சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், சீனோர் மன்றத்தின் சொத்துக்கள் இறுதித் தடவையாக 2009 ஆம் ஆண்டின் போதே மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், சொத்துக்கள் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படாமையால் மன்றத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 93(அ) பந்தியின் பிரகாரம் பட்டோலைகள் மாற்றப்பட்டமையினால் ஏற்பட்ட ஆயுட் கால எண்ணிக்கை நலன்கள்/ நட்ட பொறுப்புக்கள் (Actuarial Gain/Loss Obligation) ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காண வேண்டிய போதிலும் மன்றம் அவ்வாறு செய்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | எண்ணக்கருக்கள் மாற்றப்பட்டமையினால் ஏற்பட்ட ஆயுட் கால எண்ணிக்கை நலன்கள்/ நட்டம் ஏனைய விரிவான வருமானங்களில் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 120(அ) பந்தியின் பிரகாரம் ஊழியர் நலன்களை ஒதுக்குதல் கணிப்பீடு செய்வதற்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய மூலதத்துவம், ஊழியர் நலன்கள், செலவினங்களுக்குரிய சேவை கிரயம் ஆண்டிற்கு, உரிய வட்டி கிரயம் மற்றும் எண்ணக்கருக்கள் மாற்றமடைந்தமையினால் ஏற்பட்ட ஆயுட்கால நலன்கள்/ நட்டம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | ஊழியர் நலன்களுக்கான ஒதுக்கீட்டை கணிப்பீடு செய்வதற்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய மூலத் தத்துவம், ஊழியர் நலன்கள் செலவினங்களுக்குரிய தற்போதைய சேவை கிரயம், ஆண்டிற்குரிய வட்டி கிரயம் மற்றும் எண்ணக்கரு மாற்றமடைந்தமையால் ஏற்பட்ட ஆயுட் கால எண்ணிக்கை நலன்கள்/ நட்டம் என்பன வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஐ) | மட்டக்குளி காணி மற்றும் டீ.ஆர் விஜேவர்தன மாவத்தை காணி முதலீட்டு சொத்தாக ஈடுபடுத்தப்பட்ட போதிலும், அந்த சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 75 மற்றும் 79 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தவதற்கு பதிலாக குறிப்பு 12 இல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் உரிய சொத்துக்கள் வகுப்பில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | முதலீட்டு காணி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 1450 என்ற வங்கி கணக்கிற்காக மீளாய்வாண்டின் போது மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 1,154,021 செலுத்தப்பட்டிருந்த போதும், மேலதிக பற்று வட்டி கணக்கில் ரூபா 922,638 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மேலதிக பற்று வட்டி கணக்கு ரூபா 231,383 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மேலதிக பற்று வட்டி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் பட்டோலைகளின் பிரகாரம் தனிப்பட்ட பெயரில் ரூபா 238,822 அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், கடன்பட்டோர் பட்டோலையின் பிரகாரம் அந்த பெயரில் அறவிடுவதற்கான மீதியொன்று காண்பிக்கப்படாமையின் காரணமாக கடன்பட்டோர் மீதி இப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 இன் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை மீதியில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 19,563,024 நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் இதற்கு 07 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த, தகவல்களின் அடிப்படையில் மன்றத்துக்கு முன்னர் காணப்பட்ட மீதியொன்றை சமப்படுத்துவதற்காக உள்ளடக்கப்பட்ட மீதியாக இருந்ததுடன், இது தொடர்பாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அவ்வாறான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி 2016 இல் கணனி சார்ந்த கணக்குகளில் உள்ளடக்கும் போது ஏற்பட்டிருந்ததுடன், ரூபா 19,563,024 ஆன ஆரம்ப மீதி (நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்) 2015 இன் கணக்குகளில் இறுதி மீதிகளில் இருந்து பெறப்பட்டிருந்தது. | இந்த நிச்சியமற்ற மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஊழியர் நலன்களின் மிகை ஒதுக்கீடுகள் ரூபா 2,148,817 வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக நிர்வாக செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் ஊழியர்களுடன் ஒப்பீட்டு ரீதியில் கணிசமான அளவு ஊழியர்கள் விலகிச் சென்றமையால் அவர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிக்கொடை ஒதுக்கீடுகள் குறைவடைந்தமையால் கணக்கீட்டு வழுக்கள் ஏற்படாதிருந்ததை விருப்பத்துடன் அறியத்தருகின்றோம். | வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை வங்கியின் இலக்கம் 8302097 என்ற கணக்கின் கீழ் நிலையான வைப்பினை புதுப்பிக்கும் அறிவித்தலின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 682,406 ஆக இருந்த போதும் பட்டோலையின் படி வருடாந்த வட்டி ரூபா 824,141 ஆனமையால் ரூபா 141,735 வேறுபாடு காணப்பட்டது. அதன் பிரகாரம் வருடாந்த வட்டி வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டமையால் சீனோர் மன்றத்தின் இலாபம் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலையான வைப்பு வட்டி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | 2021 செப்டம்பர் 21 முதல் 2021 திசெம்பர் 31 வரை மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டியான ரூபா 144,439 ஆண்டின் வருமானத்தில் இனங்கண்டு, பெறவேண்டிய வட்டியாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக நிலையான வைப்பு பெறுமதியில் சேர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு பெறுமதி ரூபா 144,439 தொகை அதிகரித்தும் பெற வேண்டிய வட்டி அப்பெறுமானத்தால் குறைத்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்து. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலையான வைப்பு வட்டி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) | தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் விநியோகிக்கப்பட்ட சிட்டையிடலின் பிரகாரம் 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய நிலுவை கணக்காய்வு கட்டணம் ரூபா 1,656,000 ஆகும். எனினும் மன்றத்தின் கணக்குகளில் ரூபா 845,100 வியாபார கடன்கொடுத்தோராகவும், ரூபா 586,000 தொகை நிதி ஏற்பாட்டு ஒதுக்கக் கணக்கிலும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணம் ரூபா 224,900 இனால் மன்றத்தின் புத்தகங்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமானத்தால் மன்றத்தின் இலாபமும் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்வு கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் ஊழியர் கடன் கணக்கில் ரூபா 3,332,073 ஊழியர் கடன் மீள அறவிடப்பட்டிருந்த போதிலும், கடன்களுக்குரிய வட்டியுடன் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து குறைக்கப்பட்ட கடன் தவணை பணத்தின் பெறுமதி ஊழியர் கடன் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், கடனுக்கான வட்டி மீளாய்வாண்டின் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | ஊழியர் கடன் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 206,703 கிடைக்க வேண்டிய வாடகை வருமானமாக வகைப்படுத்துவதற்கு பதிலாக வியாபார கடன்பட்டோரின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | பெறவேண்டிய வாடகை வருமானம் மற்றும் வியாபார கடன்பட்டோர் வகைப்படுத்தல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஒ) | மன்றம் மீளாய்வாண்டின் இறுதியில் பிற்போட்ட வருமானம் ஆன ரூபா 124,909,677 மீதி மற்றும் ஊழியர் நலன் பொறுப்புக்கள் ரூபா 15,401,037 மீதி நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாக காண்பிக்க வேண்டிய போதிலும், அந்த மீதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு பிற்போட்ட பொறுப்பாக ரூபா 140,316,714 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிற்போட்ட வருமானம் மற்றும் ஊழியர் நலன் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் தனித்தனியாக காண்பிக்கப்படும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | | நிதிக் கூற்றின் படி பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | முதலீட்டு ஆதனங்களில் கிடைத்த வாடகை வருமானம் | 18,900,000 | 16,800,000 | 2,100,000 | வெளிப்படுத்தல்களில் அச்சிடல் வழுக்கள் ஏற்பட்டிருந்தமை காண்பிக்கப்படுவதுடன், கணக்குகளில் வருமானமாக இனங்கண்டு சரியான பெறுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நேரொத்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களின் எண்ணிக்கை சமமாக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | வைப்பு கணக்கு மீதி | 38,636,259 | 38,634,259 | 2,000 | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (இ) | பிற்போட்ட வருமான வரி பொறுப்புக்கள் | 4,116,170.23 | 0.34 | 4,116,169.89 | அச்சிடல் வழுக்கள் ஏற்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். | -மேற்படி- |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 94,508 | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்விற்கு தேவையான ஏடுகள் புத்தகங்கள் வழங்கப்படல் வேண்டும். |
| (ii) | பெறவேண்டிய பொருள் முற்பணம் | 115,736 | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (iii) | ஏனைய பெறுவனவுகள் | 1,897,664 | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (iv) | கடன்பட்டோர் மீதி | 53,308,846 | மீதி உறுதிப்படுத்தல் | ஏற்றுக்கொள்கின்றோம். | மீதி உறுதிப்படுத்தல் கோரப்படல் வேண்டும். |
| (v) | சம்பள கட்டுப்பாட்டு கணக்கு | 453,125 | பட்டோலைகள் | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (vi) | விற்பனை முற்பணம் | 49,125,857 | பட்டோலைகள் | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்விற்கு தேவையான புத்தகங்கள் மற்றும் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். |
| (vii) | மீளக்கிடைக்க வேண்டிய வைப்பு மீதி | 580,112 | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (viii) | நிச்சயமற்ற கிடைக்க வேண்டியவைகள் | 14,903 | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (ix) | கடன் கொடுத்தோர் மீதி | 16,551,322 | மீதி உறுதிப்படுத்தல் | ஏற்றுக்கொள்கின்றோம். | மீதி உறுதிப்படுத்தல் கோரப்படல் வேண்டும். |
| (x) | 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதி | 8,433,286 | காலப் பகுப்பாய்வு | ஏற்றுக்கொள்கின்றோம். | காலப் பகுப்பாய்வு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (xi) | ஊழியர் கடன் | 3,339,810 | ஊழியர் கடன் பதிவேடு | ஏற்றுக்கொள்கின்றோம். | ஊழியர் கடன் பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உப ஒப்பந்த அடிப்படையின் கீழ் மீன் வலை உற்பத்தி செய்யும் தனியார் கம்பனிக்கு ரூபா 5,059,049 பெறுமதியான மூலப்பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 149,274 பெறுமதியான மீன் வலை மாத்திரம் சீனோர் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த மூலப் பொருட்களை வழங்கும் போது எந்தவொரு பிணை முறியைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது உடன்படிக்கையில் கைச்சாத்திடலோ மேற்கொள்ளப்படவில்லை. அதன் பிரகாரம் எஞ்சிய மூலப் பொருட்களின் பெறுமதியான ரூபா 4,909,775 தொகை 2011 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டியவையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன், அறவிடுதல் நிச்சியமற்றதாக இருந்த போதும் இதற்காக அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த தொகை உரிய கம்பனியில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நீண்ட காலமாக நிலுவையாக காணப்படுகின்ற பணத்தை அறவிடுதல் வேண்டும். அறவிடுவதற்கு நிச்சியமற்றதாயின் அறவிட முடியாக் கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மீன்பிடி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட திக்கோவிட்ட மீன்பிடி துறைமுக செயற்திட்டத்திற்குரிய பணிகள் வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தை வரவழைத்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக மன்றத்திக்கு மீன்பிடி அமைச்சில் இருந்து அறவிட வேண்டியதாக பேரேட்டு கணக்குகள் இரண்டில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,757,058 மற்றும் ரூபா 1,770,766 ஆக கூட்டு மொத்தமாக ரூபா 3,527,824 தொகையை அறவிடுவதற்காக மன்றத்தால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன், அதற்காக அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் அமைச்சுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | நீண்ட காலமாக நிலுவையான காணப்படுகின்ற பணத்தை அறவிடல் வேண்டும். அறவிடுதல் நிச்சியமற்றதாயின் அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 45,353,134 ஆன வியாபார கடன்பட்டோர் மீதி நீண்ட காலமாக அறவிடுவதற்கு முடியாதிருந்த ரூபா 345,413 கடன் மீதிக்காக அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் . | நீண்ட காலமாக அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்கோ அல்லது அறவிட முடியாக் கடன் ஒதுக்கமோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் போது வங்கி சேமிப்பாக 04 சந்தர்ப்பங்களின் போது காசு எல்லையாக வழங்கப்பட்ட மற்றும் ஆண்டின் போது காலாவதியான ரூபா 1,221,893 பெறுமதியான சேமிப்புக்களின் பெறுமதி மாற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் . | நீண்ட காலமாக அறவிடு வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் சேமிப்புக்களை மாற்றிக் கொண்வதற்கு செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1998 யூலை 04 ஆம் திகதி தனியார் கம்பனிக்கு உணவகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்திற்குரிய டீ.ஆர் விஜேவர்தன மாவத்தையில் 02 ரூட் 18.24 பேர்ச் அளவான காணி மற்றும் அதனடிப்படையில் ஏற்படுத்த உள்ள சகல ஆதனங்களையும் அடிப்படையாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 323,515 தொகையான வருமானம் மற்றும் 2018 ஆம் ஆண்டில் இருந்து இது வரை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் அந்த ஆதனங்களின் வாடகை இழக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம் . நட்டம் இது வரையிலும் வழக்கு விசாரனையில் காணப்படுகின்றது. | சட்ட ரீதியான ஆலோசனையின் பிரகாரம் வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 16,551,322 ஆன வியாபார கடன்கொடுத்தோர் மீதியில் 90 நாட்களை விட மேற்பட்டு தீர்த்து வைக்கப்படாத கூட்டு மொத்தமான ரூபா 8,433,286 மீதியொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், இதனை தீர்த்து வைப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நீண்ட காலமாக செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 384,067 ஆன செலுத்தப்படாத சம்பளம் மற்றும் வேதன கணக்கின் மீதியில் 2006 முதல் 2010, 2011 முதல் 2015 மற்றும் 2016 ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் தீர்த்து வைக்கப்படாத மீதிகள் முறையே ரூபா 75,793 தொகை, ரூபா 113,880 மற்றும் ரூபா 66,657 ஆக இருந்ததுடன், அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு கால ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி சட்டத்தின் திருத்தப்பட்ட 11(2) ஆம் பிரிவு | எந்தவொரு மாதமொன்றிலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு அடுத்து வரும் மாதத்தின் இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், 2017 யூலை முதல் திசெம்பர் வரையாக காலத்திற்கு உரிய ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 36,740 தொகை 2019 மே மாதம் முதல் அனுப்பாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | எந்தவொரு மாதத்திலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு அடுத்து வரும் மாதத்தின் இறுதி திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 2.7.5 | திணைக்களத்தின் பெறுகை குழு வரிசை அமைச்சின் செயலாளரால் நியமிக்க வேண்டிய போதிலும், ரூபா 37,583,845 ஆன மூலப்பொருட்கள் கொள்வனவு தொடர்பாக பெறுகைக் குழு மன்றத்தின் தலைவரால் நியமிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைக் குழு நியமிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2.7.5(ஈ) | திணைக்கள பெறுகைகள் குழுவின் உள்ளடக்கத்தில் வரிசை அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் அல்லது அதற்கு சமமான மட்டத்தில் பணிப்பாளர் நியமிக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக அமைச்சின் உதவி பணிப்பாளர் அதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். | சிரேஷ்ட நிலையின் பதவியில் பொது முகாமையாளர் மாத்திரம் இருந்ததுடன், இந்த காலப் பகுதியில் அந்த பதவி வெற்றிடமாக காணப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1.3 ஆம் பிரிவு | வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2021 – 2025 ஆம் ஆண்டுகளுக்காக நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2021 நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறான நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 – 2025 ஆம் ஆண்டுகளுக்குரிய கூட்டிணைந்த திட்டம் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நாளது வரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 5.2.5 ஆம் பிரிவு | பொது முயற்சிகள் நிறுவனத்தினால் நிர்வாக சபைக்கு அங்கீகாரத்துடன் நாளதுவரையாக்கப்பட்ட இறுதி பாதீட்டின் பிரதியொன்று நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டின் பிரதியொன்று ஆண்டிற்கு அதிக கால தாமதத்தின் பின்னர் அதாவது 2021 திசெம்பர் 15 ஆம் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | பாதீட்டின் பிரதியொன்று நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி மற்றும் 5.1 ஆம் பந்தி | அரசாங்கத்தின் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு, எரிபொருளுக்காக முற்பணம் வழங்குதல், ஓட்டக் குறிப்புக்களை பேணிச் செல்லல் போன்ற பணிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த சுற்றறிக்கை தொடர்பாக போக்குவரத்து பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | எரிபொருள் எரிவு பரிசோதனை ஓட்டக் குறிப்புக்களை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | கூட்டிணைப்பு அகவிதி | | | |
| (i) | 53 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்த வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் அந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். |
| (ii) | 58 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது பணிப்பாளர் சபை அங்கத்தவர்களினால் மன்றத்தின் தலைவர் நியமிக்க வேண்டியிருந்த போதிலும், தலைவர் நியமனம் திறைசேரி செயலாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | பணிப்பாளர் சபை அங்கத்தவர்களினால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,248,596 இலாபமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 24,403,823 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 28,652,419 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு கப்பல் மற்றும் பைபர் உற்பத்தி விற்பனை வருமானம் 230 சதவீதத்தினால் அதாவது ரூபா 84,316,325 இனால் உயர்வடைந்து சென்றமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் நடைமுறைச் சொத்து விகிதம் முறையே 1 : 1.3 மற்றும் 1 : 1.47 ஆகும். நடப்பாண்டில் செலுத்த வேண்டியவைகள் ரூபா 36,881,452 இனால் அதாவது, 31 சதவீதத்தால் குறைவடைந்தமை விகிதத்தின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் விரைவுச் சொத்து விகிதம் முறையே 1 : 07 மற்றும் 1 : 0.6 ஆக இருந்தது. நடப்பாண்டில் காசு மற்றும் வங்கி மீதிகள் ரூபா 36,818,717 இனால் குறைவடைந்தமை அதாவது, 1,017 சதவீத்தால் குறைவடைந்தமை விகிதத்தின் குறைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏனைய செலுத்த வேண்டியவைகளில் காணப்பட்ட பாதுகாப்பு சேவை வழங்கல்களுக்காக இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,144,306 மீதி நானாவித வருமானக் கணக்கில் | நாட்குறிப்பு உறுதிச் சீட்டு இலக்கம் JE/01/01 இல் இணைப்புக்களில் அங்கீகாரத்துடன் உள்ளதுடன், அந்த | பதிவழிப்பதற்கான காரணம் மற்றும் அதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு பதிவழிப்பதற்கான காரணம் மற்றும் அதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்களை மீண்டும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் ரூபா 3,146,708 ஆன செலுத்த நிறுத்தி வைத்தல் கணக்கின் மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற 36 நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,938,167 ஆக இருந்ததுடன் அந்த மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | செலுத்த வேண்டிய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஏனைய செலுத்த வேண்டியவைகளில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற யாழ்ப்பான இழப்பீட்டு கணக்கின் மீதியான ரூபா 118,570 தொகை மீளாய்வாண்டின் போதும், தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இழப்பீட்டு மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஏனைய செலுத்த வேண்டியவைகளில் 2016 ஆம் ஆண்டு முதல் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 412,620 ஆன செலுத்தப்படாத பணிக்கொடை கணக்கின் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பணிக்கொடை மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நீர் விரயத்தை குறைக்கும் நோக்கில் மீன்பிடி திணைக்களம் மற்றும் நாரா நிறுவனம் ஒன்றிணைந்து சமர்ப்பித்த அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றாடலுக்கு இசைவான கப்பலொன்றை அறிமுகப்படுத்துவதன் கீழ் மாற்று எரிபொருள் வலு சக்தியான சூரிய சக்தியில் செயற்படுத்தப்படுகின்ற கப்பலொன்று குடா பிரதேசத்தில் செயற்படுத்துவதற்காக 2020 திசெம்பர் 20 ஆம் திகதி சீனோர் மன்றம் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒழுங்கமைத்து செயற்திட்டத்திற்கான உடன்படிக்கையொன்றை | புதிய செயற்திட்ட முன்மொழிவாக அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு முதலீட்டாளர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் கட்டளைகளை கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். | கட்டளைகளை பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திட்டிருந்தது. மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட 13 அடி நீள படகு சூரியகல பனலை பொருத்துவதற்கு இணங்கியிருந்த மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2020 நவம்பர் 01 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைகின்ற இரண்டு மாத காலத்தில் பூர்த்தி செய்ய வேண்டியதாக காணப்பட்ட போதிலும், 04 மாத தாமதத்தின் பின்னர் அதாவது 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மன்றத்தின் இணைய பக்கத்தில் அதன் வெற்றிகரத் தன்மை தொடர்பாக காண்பிக்கப்பட்ட கட்டளையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், கட்டளை எதுவும் கிடைத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | தேவையினை கவனத்தில் கொள்ளாமல் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக 2022 ஆகஸ்ட் 23 ஆம் திகதி வரையில் களஞ்சியத்தில் காணப்பட்ட அசைவுறாத இருப்புக்கள், மெதுவாக அசைகின்ற இருப்புக்கள், இழப்புக்கு உட்பட்ட இருப்புக்களின் பெறுமதி முறையே ரூபா 5,516,287 தொகை, ரூபா 434,222 மற்றும் ரூபா 70,715 ஆக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,040,000 பெறுமதியான மீன்பிடி கப்பலுக்காக பயன்படுத்தப்படுகின்ற 05 மீன்களை குளிரூட்டுவதற்கு பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | 2006 இன் போது 08 விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 03 விடயங்கள் தற்போது விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்துரைத்த மதிப்பீட்டு பெறுமதி பெறப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமையின் பிரகாரம் அகற்றுவதற்கோ அல்லது விற்பதற்கோ திட்டமிடப்பட்டுள்ளது. | தேவையினை கவனத்தில் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், காணப்பட்டுகின்ற இருப்புக்கள் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமையின் படி அகற்றுவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளோ எடுத்தல் வேண்டும். 05 குளிரூட்கள் தாமதமின்றி பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட தனியார் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட காணியில் 100 பேர்ச் இன்னுமொரு பொதுக் கம்பனிக்கு கைளிப்பதற்காக 2020 யூலை 16 ஆம் திகதிய இலக்கம் அமப20/1042/204/050-1 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 1971 இன் 35 ஆம் இலக்க வியாபார வர்த்தக (கைப்பற்றல்) சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் கையளித்த நிறுவனம் ஆன வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் எதிர்கால இருப்பு தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக அதற்கு முரணாக 2020 யூலை 01 ஆம் திகதிய எம்எப்ஈ/ஈஆர்டி/38/சீஎம்/2020/14 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பில் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். அது தொடர்பாக வரிசை அமைச்சு மற்றும் நிதி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை குறிப்பை தயாரிக்கும் போது சீனோர் மன்றத்தின் எதிர்கால இருப்பிற்கு ஒத்து வருகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் போது தனியார் கொள்வனவாளருக்காக ரூபா 3,061,157 செலவினத்தை செய்து மிதக்கும் இறங்கு துறையொன்று அமைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உற்பத்திற்காக நிதி செலுத்தி எடுத்துவராமையின் காரணமாக நடைமுறை வேலையாக கப்பல் தளத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. பூர்த்தி செய்து கைளிப்பதற்கு பெறப்பட்ட மேற்கூறப்பட்ட கட்டளைக்காக இரண்டு தரப்பினர் உடன்படிக்கையில் கைச்சாத்திடாதிந்ததுடன் செயலாற்றல் பிணை முறியோ அல்லது முற்பணமோ பெறப்படாதிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். முற்பணம் வழங்கும் வரை பொருட்கள் வழங்கப்படுவதில்லை என கூட்டுத்தாபனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், கூட்டுத்தாபனம் தரப்பினர்களிடம் இருந்து எந்தவொரு நல்ல பதிலையும் பெற்றிக்கவில்லை. தற்போது உற்பத்தியின் மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்யும் போது செயலாற்றல் பிணை முறி அல்லது முற்பணம் பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | மீன் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் தரை இறக்கும் மீன்களின் தரத்தை விருத்தி செய்வதற்காக மீன்பிடி கப்பல் முறைமையை அபிவிருத்தி செய்தலின் கீழ் 55 அடி நீளமான 10 கப்பல்கள் அலகொன்று ரூபா 26 மில்லியன் வீதம் உற்பத்தி செய்வதற்கு 2016 மே 24 ஆம் திகதிய இலக்கம் 16/0980/785/020 என்ற அமைச்சரவை குறிப்புக்கு அமைச்சரவை | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக மீன் பிடி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் உரிய தரப்பினர் யாவருடனும், தொடர்பு கொண்டு கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்ததுடன், | மீன்பிடி கப்பலை பெற்றுக் கொள்ளும் போது உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், நட்டம் ஏற்படாத வகையில் உற்பத்தி பணிகள் |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், உற்பத்தி செய்யும் போது அந்த கப்பலின் அளவு 59.5 அடியாக அதிகரிக்கப்பட்டிருந்த போதும், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. இந்த கப்பல் உற்பத்தி செய்வதற்காக மீன்பிடி மற்றும் நீர் வழங்கல் திணைக்களத்தால் சீனோர் மன்றத்திற்கு ரூபா 145 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இந்த கப்பல் உற்பத்தியின் போது அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் ஒரு கப்பலுக்கான கிரயமான ரூபா 29 மில்லியன் (வரியுடன்) ஆக இருந்ததுடன் சீனோர் மன்றத்தால் உற்பத்தி செய்யப்பட்ட 05 கப்பல்களுக்காக அந்த எல்லையினை விஞ்சி செலவிடப்பட்டமையால் மன்றத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 38,384,475 ஆகும். | உடன்படிக்கையை நாளது வரையாக்குவதங்கு முன்மொழியப்பட்ட போதும், மீன்பிடி தரப்பினர் அதற்காக இதுவரை தமது புதிய நிபந்தனைகள் தொடர்பாக அறிவித்தல் எதனையும் வழங்கியிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மேற்கூறப்பட்ட (ஆ) இல் குறிப்பிடப்பட்ட 10 கப்பல்கள் தனியார் கம்பனிக்கு உற்பத்திற்காக வழங்கப்பட்டு 03 கப்பல்களில் இரண்டு கப்பல்கள் அதாவது இலக்கம் IMUL-A-0061KMN மற்றும் IMUL-A-0062KMN என்ற கப்பல்களின் வேலை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் பூர்த்தி செய்து கையளிக்கப்படாதிருக்கும் போது அதற்காக ரூபா 30,321,343 தொகை மன்றத்தால் அந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பாக மீன் பிடி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் உரிய தரப்பினர் யாவருடனும், தொடர்பு கொண்டு கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையை நாளது வரையாக்குவதங்கு முன்மொழியப்பட்ட போதும், மீன்பிடி தரப்பினர் அதற்காக இதுவரை தமது புதிய நிபந்தனைகள் தொடர்பாக அறிவித்தல் எதனையும் வழங்கியிருக்கவில்லை. | இந்த மன்றத்திற்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் இந்த கொடுக்கல் வாங்கல்கள் தாமதம் இன்றி முடிவுருத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | மேலே குறிப்பிடப்பட்ட IMULA-0061-KMN என்ற கப்பலுக்காக 400 HP இயலளவை உடைய எஞ்சின் பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் 300 HP இயலளவை உடைய எஞ்சின் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. அதன் பணிகள் தொடர்பாக சரியான பரிசோதனை மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | IMULA-0062-KMN என்ற பல்நோக்கு மீன்பிடி கப்பலின் ஒரு பகுதி மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த கப்பலுக்கான எஞ்சின், மின்பிறப்பாக்கியை உள்ளடக்கிய மேலதிக விடயங்கள் கொள்வனவு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாதிருந்ததுடன், உரிய எஞ்சினுக்காக மன்றத்தால் உற்பத்தி கம்பனிக்கு ரூபா 4,661,782 தொகை 2017 மார்ச் 02 ஆம் திகதி செலுத்தப்பட்டு 04 வருடங்கள் கடந்திருந்த போதும், எஞ்சின் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2013 ஆம் ஆண்டில் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் சீனோர் மன்றத்தில் மட்டக்குளி கப்பல் தளத்தில் குறைந்த வெப்பநிலை மற்றும் ஈரப்பதனை கட்டுப்படுத்தும் உயர் நியமத்தை உடைய கப்பல் உற்பத்தி செய்வதற்காக மத்திய மயப்படுத்தப்பட்ட வளிப்பதனாக்கி முறைமையொன்றுடன் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்ட போதும் 2022 செப்டம்பர் 08 ஆம் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 10,543,195 ஆகும். வெளிநாட்டு மானிய செயற்திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இது ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றாக இல்லாமையினால் இலங்கை அரசாங்கத்திற்கு மானியத்தில் இருந்து நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது ஒரு தடவையின் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட போதும், அதில் செலவாகின்ற மின்சார இயலளவு அதிகமாக இருந்தமையால் மின்சாரத்திற்காக அதிக செலவினங்களை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. எனினும், தொடர்ச்சியாக செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், மின்சார பயன்பாடு உச்ச மட்டத்தில் பேணிச் செல்வதற்கு தொழில்நுட்ப ஆலோசனை பெறப்பட்டுள்ளது. எனினும், ஒரு முறைமையில் இருந்து மேற்கொள்ளக்கூடிய மற்றும் தொடர்ந்தும் செயற்பாட்டு நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக போதியளவான கட்டளைகள் நிறுவனத்திற்கு கிடைக்காமையினால் வளிப்பதனாக்கி முறைமையை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்ற கட்டளையின் பிரகாரம் இந்த வளிப்பதனாக்கி முறைமையை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | மீன்பிடி கப்பல் கட்டளைகளை பெற்றுக் கொள்ளும் போது உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், நட்டம் ஏற்படாத வகையில் உற்பத்தி பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தில் 2012 ஏப்ரல் 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்தத்தின் பிரகாரம் பதவியணியினர் 135 ஆக இருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 71 ஆகும். அதன் பிரகாரம் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 03 பதவிகள், ஆரம்ப நிலையில் 15 பதவிகளும் ஆக 64 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மன்றத்தின் செயற்திறனுக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | நிறுவனத்தில் காணப்படுகின்ற மோசமான நிதி நிலைமையின் காரணமாக புதிய ஆட்சேர்ப்புக்கள் வரையறுக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 05/2020 என்ற திறைசேரி செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆ. I பந்தியின் இணைப்பு 01 இன் பிரகாரம் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ள வாகனங்கள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வாகனங்களை இனங்காணல், பழுதுபார்ப்பதற்கு வசதியீனமான மற்றும் பழுதுபார்த்தல் பொருளாதார நிலைமையில் செலவினம் ஆகின்ற வாகனங்களை போன்றவையாக வாகனங்களை இனங்காண்டு விற்றுத்தீர்க்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மன்றத்தால் 02 வருடங்கள் முதல் 10 வருட கால வீச்சில் உடைந்த மற்றும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத இலக்கம் GB-5762, 301-3405, 61-8772 என்ற வாகனங்கள் மற்றும் டெக்டர் வண்டி தொடர்பாக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு பொருளாதார வளம் காணப்படாமையினால் உடைந்த நிலையில் காணப்படுகின்றது என உங்களால் இனங்காணப்பட்ட வாகனங்களும் தற்போது ஓட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. | பழுதுபார்க்க வேண்டிய நிலைமையில் உள்ள வாகனம் தொடர்பாக இனங்காணல் மற்றும் விற்றுத் தீர்த்தல் என்பன சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 1994 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய இலக்கம் 26/92(1) என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் வாகனங்களில் அரச இலட்சணை இடவேண்டியிருந்த போதிலும், மன்றத்தில் காணப்படுகின்ற 05 வாகனங்களுக்கு அதில் அரச இலட்சினை காட்சிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச இலட்சணை காட்சிப்படுத்தப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 06 செயற்பாடுகளின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்ற மீன்பிடி கப்பல், மதிக்கும் வீட்டு படகுகள், மதிக்கும் உணவகம், ஓய்வு படகுகள் போன்ற உற்பத்தியாளர்களின் பௌதீக செயல்முன்னேற்றம் 60 சதவீதமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட விடயங்களின் அளவு குறித்துரைத்த ரீதியில் காண்பிக்கப்படாமையின் காரணமாக அந்த செயல்முன்னேற்றம் தொடர்பாக ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டம் முறையாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட நிதி ஏற்பாடான ரூபா 430 மில்லியன் தொகையில் ரூபா 300 மில்லியன் அதாவது 70 சதவீதம் ஒதுக்கப்பட்டு சகல துணைப்பாகங்களுடன் 69 அடி நீளமான 04 மீன்பிடி கப்பல்கள் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பௌதீக செயல் முன்னேற்றத்தை காண்பிக்கும் போது 02 அலகுகளாக காண்பித்து 100 சதவீதமாக காண்பிக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் படி 02 கப்பல்களுக்காக ரூபா 52 மில்லியன் செலவிடப்பட்டு 17 சதவீதம் நிதி முன்னேற்றம் பெறப்பட்டிருந்தமையால் 04 படகுகளுக்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்குதல் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டம் முறையாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 30-32 அடி நீளமாக மீன்பிடி கப்பல் தயாரிப்பதற்கு ரூபா 1.87 மில்லியனும், மிதக்கும் வீட்டு படகினை தயாரிப்பதற்கு ரூபா 7.84 மில்லியனும், மிதக்கும் உணவகம் தயாரிப்பதற்கு ரூபா 3.43 மில்லியனும், 13.5 அடி நீளமான ஓய்வு பெறும் படகொன்றை அமைப்பதற்கு ரூபா 1.16 மில்லியனும் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், அந்த செயற்திட்டம் எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்காக நேரடியாக மற்றும் மறைமுகமாக மீன்பிடி உற்பத்தியில் 800 அலகுகளை மேற்கொள்வதற்கு ரூபா 34.68 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், கட்டளைகளை பெற்றுக் கொள்வதற்காக விற்பனை மேம்படுத்தல் செயற்பாடுகளுக்காக அனுப்பாமையின் காரணமாக பௌதீக செயல்முன்னேற்றம் 280 அலகுகள் அதாவது 35 சதவீதம் மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் 7.31 மில்லியன் அதாவது 21 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | நாட்டில் காணப்பட்ட பொருளாதார மற்றும் சுற்றுலா துறைகளின் பின்னடைவின் காரணமாக மன்றத்திற்கு எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்ததுடன், காணப்பட்ட சிக்கலான நிதி நிலைமையின் காரணமாக சந்தைப்படுத்தல் விற்பனை மேம்படுத்தல்களுக்காக செலவினங்களை வரையறுக்க வேண்டியிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த போதும், வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் வாகனங்களை தூக்கும் உபகரணங்களை பொருத்தும் பணிகளை மேற்கொண்டு மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் மட்டக்குளி கப்பல் தளத்தில் LK 2629 என்ற ட்ரக் வண்டிக்காக வாகன உபகரணங்களை பொருத்துவதற்காக 2021 பெப்ரவரி 23 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்த போதிலும், அவ்வாறான பொருத்துதல்கள் செய்யப்படாதிருந்தமையால் அந்த நோக்கத்தை அடைவதற்கு முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்தமை யால் வருமானம் இழக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபை அங்கீகரித்திருந்த வாகன உபகரணங்களை பொருத்தும் பணிகளை மேற்கொண்டு மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |